# பெரியார் பல்கலைக்கழகம்

தேசியத் தரமதிப்பீடு **A++** தரச்சான்று – தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்புத் தரம் 94
அரசு பல்கலைக்கழகத் தரம் 40 – நிலையான வளர்ச்சி இலக்கு நிறுவனங்கள் தரவரிசை 11–50

**சேலம் - 636 011.**

## தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி இருக்கை
## பேரறிஞர் அண்ணா இருக்கை
## முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம்

## பன்முகத் தளத்தில்

# பெரியாரியம்

## இரண்டுநாள் தேசியக் கருத்தரங்கம்

நாள் : டிசம்பர் 2026

நிகழிடம் : பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636 011.



## பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

சேலத்தில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பெற்றது. சமூக சீர்திருத்தவாதியான தந்தை பெரியாரை நினைவுகூர்தல் பொருட்டு, பல்கலைக்கழகத்திற்குப் "பெரியார் பல்கலைக்கழகம்" எனப் பெயரிடப்பட்டது. "அறிவால் விளையும் உலகு" என்பது இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாகும். இது சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளை உள்ளடக்கியது ஆகும். இப்பல்கலைக்கழகம் உயர்கல்வியைப் பல்கலைக்கழகத் துறைகள், இணைவுபெற்ற கல்லூரிகள் மற்றும் பெரியார் தொலைதூரக் கல்வி நிறுவனம் ஆகிய மூன்று வழிகளில் வழங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தில் 27 துறைகளும், பல்கலைக்கழகத்தின் கீழ் 117 இணைவுபெற்ற கல்லூரிகளும் உள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகம் 8 துறைகளுடன் தருமபுரியில் முதுநிலை விரிவாக்க மையத்தைக் கொண்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் 12(பி) மற்றும் 2(எப்) தகுதியினைப் பெற்ற இப்பல்கலைக்கழகத்திற்குத் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை ‘‘ஏ++" தரத்தினை வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் இந்தியக் கல்வி அமைச்சகத்தின் தேசியக் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியப் பல்கலைக்கழகங்களுள் 94 ஆவது இடத்தையும், அரசு பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் 40 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. மேலும், நிலையான வளர்ச்சி இலக்கு நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில் 11-50 இடத்தையும் பெற்றுள்ளது.

## தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி இருக்கை
## பேரறிஞர் அண்ணா இருக்கை
## முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய ஆளுமைகளின் சிந்தனைகள், சமூகப் பார்வை மற்றும் சமத்துவக் கருத்துகளை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் பெரியார் பல்கலைக்கழகத்தில் 2008 ஆம் ஆண்டு தந்தை பெரியார் ஈ.வெ.இராமசாமி இருக்கை; பேரறிஞர் அண்ணா இருக்கை; முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் ஆகியன நிறுவப்பெற்றன. தொடர் கருத்தரங்குகள் நடத்துவது, மாநாடுகள் நடத்துவது, ஆய்வு நூல்களை வெளியிடுவது ஆகியனவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த இருக்கைகள் மற்றும் ஆய்வு மையம் செயல்பட்டு வருகின்றன. இம்மையத்தின் சார்பில் திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் என்னும் பகுதிநேர முதுநிலைப் பட்டயப்படிப்பு நடத்தப்பட்டு வருகின்றது. ஆய்வு இருக்கைகள் மற்றும் ஆய்வு மையம் சார்பில் கடந்த 2025 மார்ச் மாதத்தில் 'திராவிட இலக்கியம் மற்றும் இதழியல்' என்னும் பொருண்மையிலான இரண்டுநாள் தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பட்டு ஆய்வாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் நூலாக வெளியிடப்பட்டன. கடந்த 2025 ஜூலை மாதத்தில் 'திராவிட வரலாற்றுத் தடத்தில் தொல்லியல் ஆய்வுகள்' என்னும் பொருண்மையில் ஆய்வரங்கமும், 2025 அக்டோபர் மாதத்தில் ‘திராவிட சினிமா’ என்னும் பொருண்மையில் ஒருவாரகாலப் பயிற்சிப் பட்டறையும் நடத்தப்பட்டன. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது பிறந்தநாள் மற்றும் நினைவு நாள்களில் அவர்களது கருத்தியல் சிந்தனைகள் மாணவர்களைச் சென்றடையும் நோக்கில் பல்வேறு தலைப்புகளில் சிறப்புப் பொழிவரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நூல்களையும், அவர்தம் கருத்துகள் குறித்துப் பிற ஆளுமைகள் இயற்றிய நூல்களையும் ஆவணப்படுத்துதல் முதலான செயல்பாடுகள் இந்த இருக்கைகள் மற்றும் ஆய்வு மையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## அறிவிப்பும் அழைப்பும்

சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் தந்தை பெரியார் ஈ.வெ.இராமசாமி இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை, முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் சார்பில் நடத்தப்பெறவிருக்கும் 'பன்முகத் தளத்தில் பெரியாரியம்' என்னும் பொருண்மையிலான இரண்டுநாள் தேசியக் கருத்தரங்கிற்கு ஆய்வறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் முதுநிலை மாணவர்களிடமிருந்து கீழ்க்காணும் பொருண்மைகளுள் ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

## பன்முகத் தளத்தில் பெரியாரியம்

1. பெரியாரின் தனித்துவப் பண்புகள்
2. மனித மாண்புகளைப் போற்றிய பெரியார்
3. பெரியாரின் தன்நல மறுப்பு
4. சுயசிந்தனை மரபில் பெரியார்
5. பெரியாரின் சொற்பொழிவு உத்திகள்
6. பெரியாரின் எழுத்து நயம்
7. பெரியாரின் கல்வியியல் சிந்தனைகள்
8. பெரியாரின் சுயமரியாதைக் கருத்தியல்
9. பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள்
10. பெரியாரின் சமூக சமத்துவக் கோட்பாடு
11. பெரியாரின் வாழ்வியல் சிந்தனைகள்
12. பெரியாரின் அறிவியல் அணுகுமுறை
13. பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்தியல்
14. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்
15. பெரியாரின் இதழியல் பணி
16. பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி
17. பெரியாரின் சமூகநீதி
18. பெரியாரின் பொருளியல் சிந்தனைகள்
19. பெரியாரின் போராட்டக் களங்கள்
20. பெரியாரின் சமூக விடுதலைக் கோட்பாடுகள்
21. சாதி ஒழிப்பில் பெரியார்
22. பழமைவாத எதிர்ப்பில் பெரியார்
23. சமகாலத் தலைமுறைக்குப் பெரியார்
24. ஒப்பீட்டு நோக்கில் பெரியார்
25. தத்துவவியல் நோக்கில் பெரியார்

மேலும் 'பன்முகத் தளத்தில் பெரியாரியம்' என்ற பொருண்மையைப் புலப்படுத்தும் பிற தலைப்புகளிலும் கட்டுரைகள் அமையலாம்.

## ஆய்வுக் கட்டுரைகளுக்கான வழிகாட்டுதல்கள்

1. ஆய்வுக்கட்டுரைகள் மேற்கண்ட பொருண்மைகளை அடிப்படையாகக்கொண்டும், பன்முகத் தளத்தில் பெரியாரியப் பார்வையுடையனவாகவும் அமையப்பெறுதல் வேண்டும்.
2. ஆய்வறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் முதுநிலை மாணவர்கள் கட்டுரைகள் வழங்கலாம்.
3. ஆய்வுக் கட்டுரைகள் முறையான ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றியும், கருதுகோளை மையமிட்டதாகவும், புதுவிதமான ஆய்வுப்பார்வையை வெளிப்படுத்துவதாகவும் பிழைகளின்றி அமைதல் வேண்டும்.
4. கட்டுரைகள் ஒருங்குறி (யூனிகோட்) எழுத்துருவில் 12 புள்ளி அளவில் 1.5 இடைவெளியுடன் அமைதல் வேண்டும். கட்டுரைகள் 10 பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.
5. ஆய்வுச் சுருக்கம் வழங்க இறுதி நாள் : 10.11.2026. கட்டுரைகள் வழங்க இறுதி நாள்: 20.11.2026. கருத்தரங்கில் வாசிக்க தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் குறித்த தகவல்கள் 30.11.2026 ஆம் நாளுக்குள் தெரிவிக்கப்படும்.
6. மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டளவில் மட்டுமே கட்டுரைகள் நூலாக்கத் தொகுப்பிற்கு ஏற்கப்படும். மேற்கண்ட விதிமுறைகளைப் பின்பற்றாத, மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டிற்குள் அமையாத கட்டுரைகளை நூலாக்கத் தொகுப்பிற்கு ஏற்க இயலாது.
7. தொகுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் மட்டும் கருத்தரங்கிற்குப் பிறகு ISBN எண்ணுடன் நூலாக வெளியிடப்படும்.
8. கருத்தரங்கிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரையாளர்களுக்கு எவ்விதப் பதிப்பு மற்றும் பங்கேற்புக் கட்டணமும் இல்லை.
9. ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி : **kalaignarresearch@periyaruniversity.ac.in**
10. 2026 டிசம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் கருத்தரங்கம் நடைபெறும். கருத்தரங்க நாள்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

## தொடர்பிற்கு


பேராசிரியர் **இரா.சுப்பிரமணி,** இயக்குநர் (பொ.)

முனைவர் **ரா.சிலம்பரசன்,** கௌரவ விரிவுரையாளர் **(8012193831)**

தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி இருக்கை

பேரறிஞர் அண்ணா இருக்கை

முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம்

பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -636 011.

மின்னஞ்சல் : **kalaignarresearch@periyaruniversity.ac.in**